2006 ஆகஸ்ட் 7]

புறநகர்ப் பகுதிக்கு மாற்றவேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். கரூர் நகரில் உள்ள தற்போதைய பேருந்து நிலையத்தை கரூர் நகரப் பேருந்து நிலையமாக மாற்றி, புறநகர்ப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைத்திட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

9—

தனி மாவட்டம்

***378—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கோவை மாவட்டம் மக்கள் தொகையிலும், நிலப்பரப்பு அளவிலும், சட்டமன்றத் தொகுதி எண்ணிக்கையிலும் தமிழகத்தில் கூடுதலாக இருக்கிறது. ஆகவே, அதை இரண்டு மாவட்டங்களாக்கினால் நிர்வாக ரீதியான பணிகளுக்கு உதவி செய்யும் என்ற முறையில் இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தேன். அமைச்சர் அவர்கள் அதற்கான வாய்ப்பில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக, பொருத்தமான நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, இங்கே ஒரு கேள்வியை நான்

[2006 ஆகஸ்ட் 7

கேட்க விரும்புகிறேன். பொதுவாக, மாவட்டங்கள் பிரிக்கப்படுவதற்கு அரசு என்ன அளவுகோல் வைத்திருக்கிறது? அதற்கு வழிகாட்டும் நெறிமுறைகள் ஏதாவது இருக்கின்றவா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம், மாவட்டம் திருப்பூர் பெயரால் அமைய வேண்டுமென்பதைவிட, அந்த மாவட்டத்திற்கு திருப்பூர் தலைமையிடமாக ஆக வேண்டுமென்பதுதான் முக்கியமாக கருதப்படுவதாகக் கருதுகின்றேன். மாவட்டம் ஒன்று அமையுமேயானால், அப்பொழுது திருப்பூர் தலைமையிடமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் பின்னலாடை உற்பத்தியில் முதல் இடத்திலேயும், ஏற்றுமதியில் இந்தியாவிற்கு அதிக அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த நகரம். அந்த நகரத்தை மாநகராட்சியாக அறிவிக்க வேண்டும், அந்த மாவட்டம் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு அமைய வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வலியுறுத்தி வருகிறோம். இதற்கிடையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியாலும், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஒத்துழைப்போடும் இப்போது மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம். ஆனால், கோவை மாவட்டம், 14 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய மாவட்டம். அதை இரண்டாகப் பிரிப்பது பொருத்தமுடையதாக இருக்கும். அதேவேளையில், இது வளர்ந்து வரும் நகரம். ஏற்றுமதிக்கு உதவிடும் நகரம் என்ற காரணத்தினால், உலக நாடுகளிலிருந்து பின்னலாடை பெறக்கூடிய மிகப் பெரிய முதலாளிகள் எல்லாம் வரக்கூடிய முக்கியத்துவம் இதற்கு இருக்கின்ற காரணத்தினாலே, இந்த அவசிய முக்கியத்துவத் தேவையின் அடிப்படையில் திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு இங்கே ஒரு மாவட்டம் அமைய வேண்டும். அவ்வாறு அமைவதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

2006 ஆகஸ்ட் 7]

அதேவேளையில் இன்று பெரிய மாவட்டங்களாக இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களை, 6 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளடங்கிய ஒரு மாவட்டமாக பிரிப்பது, நிர்வாக வளர்ச்சிக்கும், மக்கள் நலத் திட்ட மேம்பாட்டிற்கும் உகந்ததாக இருக்கும் என்ற அடிப்படையிலே ஒரு கொள்கை முடிவை எடுத்து, மாவட்டங்களைப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. மணி அவர்கள் பெரிய மாவட்டங்களையெல்லாம் ஆங்காங்கே 6 அல்லது 7 தொகுதிகள் அடங்கிய சிறு, சிறு மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்து, திருப்பூர் தனி மாவட்டமாக ஆக வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார். பெரிய மாவட்டங்கள் சிறிய மாவட்டங்களாக அமையும் நேரத்தில் திருப்பூர் பிரச்சினையும் கவனிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 10, திரு. க. சுந்தர், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

10—

தரம் உயர்த்துதல்

***621—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தை தாலுகாவாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வாலாஜாபாத்தை தாலுக்காவாக உயர்த்துகின்ற எண்ணம் அரசிடம் இல்லை.